ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2069/18 - 2018 මැයි මස 01 වැනි අඟහරුවාදා - 2018.05.01
*2069/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2018, மே மாதம் 02 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2017.11.08 ஆந் திகதிய 2044/ 26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெரிய வெங்காயம் சம்பந்தமான உத்தரவு மற்றும் 2018.04.01 ஆந் திகதிய 2064/ 49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உருளைக் கிழங்கு சம்பந்தமான உத்தரவு 2018, மே மாதம் 02 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, மே 01.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01. | 07.01 | 0701.90 | பிற - உருளைக் கிழங்கு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |
| 02. | 07.03 | 0703.10.20 | பெரிய - வெங்காயம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 |

05-451

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.